1979 மார்ச் 30] [திரு. ப. குழந்தைவேலு]

பூச்சி மருந்து சட்டம் 1968.ன் கீழ் மத்திய பூச்சி மருந்து கழகத்திலுள்ள உரிமம் வழங்கும் குழுவிற்கு இப்பூச்சி மருந்துக்கான உரிமத்தை வழங்கிட இந்நிறுவனம் மனு செய்துள்ளது. உரிமத்துக்கான மனு மத்திய பூச்சிமருந்து கழகத்தின் பரிசீலனையிலுள்ளது இக்கழகத்தால் இப்பூச்சி மருந்துக்கான உரிமத்திற்கு அனுமதி கிடைத்த பின்னரே அதிக அளவில் இப்பூச்சி மருந்தை இறக்குமதி செய்து உபயோகப்படுததமுடியும்.

மத்திய பூச்சி மருந்து கழகத்தால் இப்பூச்சி மருந்துக்கான உரிமம் வழங்குவதில் ஒரு முடிவு எடுத்த பின்னரே ''டெமரான்'' பூச்சி மருந்தை தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

மத்திய பூச்சி மருந்து கழகம் இப்பூச்சி மருந்துக்கான உரிமத்தை வழங்குவதில் விரைவான முடிவு எடுக்க ஏதுவாக இத்துறையால் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் இத்துறையால் தரப்பட்டுள்ளன. இந்நிறுவனம் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தி இப்பூச்சி மருந்தை கொண்டு விரிவான உயிரின மற்றும் வயல் வெளிச் சோதனைகளை இத்துறையால் நடத்தக் கோரியுள்ளன. கோவில்பட்டியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இப்பரிசோதனைகள் நடை பெற்று வருகின்றன.

(ஆ) முகவை மாவட்டத்தில், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் கொடுக்க மறுப்பது குறித்து.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''முகவை மாவட்டத்திலுள்ள, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகளில் நூல் கொடுக்க மறுப்பதால், நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காமல் உள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் தற்போது 135 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்கின்றன். இவைகளில் 26,854 தறிகள் உள்ளன. மேற்கூறிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் விநியோகம்

செய்யும்பொருட்டு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ ஆப்டெக்ஸ்), அருப்புக்கோட்டை, மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு விநியோக நிலையங்களை அமைத்துள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மாதாந்திர தேவைகளுக்கேற்ப மேற்கூறிய நூல் விநியோக நிலையங்கள் மூலம் மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு நூற்பு ஆலைகளிடமிருந்து நூல்களை கொள்முதல் செய்து கைத்தறி இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது. இந்த மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குக் கடந்த ஆகஸ்ட் 1978 முதல் சனவரி 1979 முடிய 2,270 பேல் பருத்தி நூல் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதுதவிர ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு 107 பேல் பாலியஸ்டர் நூல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் முகவை மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தித் திறனைக் காட்டும் வகையில், கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களை நோக்கலாம்:—

மாதம்.	மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.)
ஆகஸ்ட் 1978	56.00
செப்டம்பர் 1978	52.00
அக்டோபர் 1978	66.62
நவம்பர் 1978	61.89
டிசம்பர் 1978	78.51
ஜனவரி 1979	81.37

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி ஒவ்வொரு மாதமும் அதிகரித்துள்ளதை மேற்கண்ட குறிப்பிலிருந்து அறியலாம்.

எனவே, மேற்கண்டவைகளின் மூலம் முகவை மாவட்டத்தில் நூல் பற்றாக்குறையோ அல்லது நெசவாளர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமையோ ஏற்படவில்லை.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்திலே கைத்தறி ஆய்வாளர்கள் சில கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கொடுக்கவேண்டுமென்று கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ஒப்புதல் கொடுத்தாலும், நூல் கொடுக்க மறுக்கிறார்கள். அதே மாதிரி, கோ-ஆப்டெக்சிலும் சில குறிப்பிட்ட சங்கங்களுக்குத்தான் நூல் கொடுக்கிறார்கள். எனவே, அவர்களும் நூல் கொடுக்க மறுக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, திருச்செந்தூர், கன்னியாகுமரி, பேட்டை, திருவில்லிப்புத்தூர் போன்ற இடங்களிலே உள்ள நூற்பாலைகளிலும் நூல் கொடுக்க மறுக்கிறார்கள். ஆதலால் அங்கே நூல் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கிடைக்க வேண்டுமென்பதற்காக இரண்டு ''யார்ன் டிப்போக்கள்'' திறந்திருக்கிறோம். எனவே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நேரடியாக நூல் சப்ளை செய்ய வேண்டிய அவசியமில்லை. கைத்தறித் துறை இயக்குநர் அவர்கள் நூலை விலைக்கு வாங்கி, இந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த நூலை விற்பனைக்கு கொடுக்கிறார்கள். ஒரு வேளை இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நேரடியாக ஆலைக்குச் சென்று, கடனுக்கு நூல் வேண்டுமென்று கேட்டு, மறுக்கப்பட்டிருக்கலாம். எனவே, இந்தச் சங்கங்களுக்குத் தேவையான நூலை, இந்த நூல் விற்பனை நிலையங்களிலே இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எனது கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து அறிக்கை இங்கே வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இங்கே அறிக்கை வைக்கப்படவில்லை. வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி விசாரிக்கிறேன்.

(5) அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973–74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள், பற்றிய மேற்படி குழுவின் ஆறாவது அறிக்கையை அளிக்கிறேன்.